பரமபதி துணை. 4326

# சமரச சித்தாந்த போதினி

என்னும்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

# உபதேச கவி மஞ்சரி.

முதற்பாகம்

---

பொள்ளாச்சி

முனிசிபல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

நா. கனகராஜையரால் இயற்றி

---

பொள்ளாச்சி

விவேகானந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

மகாமகோபாத்தி
டாக்டர். உ. வே. சா
நூல் நி
சென்னை

---

விலை ] Rights Reserved. [ 4 அணா.

உ

பரமபதி துணை.

# முகவுரை.

---

தமிழ் மொழியில் முறையான இலக்கண விலக்கியப்பயிற்சி குன்றி, வசன நூல்களே பிழையுள்ளனவும் இல்லனவுமாய்ப் பெருகி, நாட்டவர்க்கு மகிழ்வூட்டி வரும் தற்கால நிலை அறிந்தும அறிவிலும் அனுபவத்திலும் சிறியேன், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் அம்ருத வாக்கியங்களிற் சிலவற்றைச் செய்யுளாயிசைத்து ஆன்றமைந்த புலவோரும் முனிவரும் வேதாந்திகளும் நிறைந்த நந்தமிழ் நாட்டிற்கு இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

எனது அறிவின் சிறுமையும் இந்நூற் பொருளின் பெருமையும் ஒப்புநோக்கும் புலவர் பெருமக்கட்குப் பெருநகைப்புத் தோன்றுமாயினும் காய்தல் உவத்தல் அகற்றி யொரு பொருட்கண் ஆய்தல் புரியும் அறிவுடையாராகிய அன்னார் எனது புன்கவிக்கவசம் பூண்டு புறம்போந்த பெரியார் கொள்கைகளைப் பாராட்டுவார்கள் என்றே நம்புகிறேன்.

இம் முதற்பாகத்தைத் தமிழ்பயிலாளிகள் அங்கீகரிப்பதையறிந்து இரண்டாம்பாகம் வெளியிடக்கருதியுளேன். குற்றங்களைந்து குறைபெய்து கைக்கோடல் கற்றறிந்த மேலோர் கடன்.

ஆக்கியோன்.

உ

பரமபதி துணை.

## காப்பு.

பிரணவத்தி னுட்பொருளாம் பெம்மான் சிவந்த
சரணவத்தி யின்னருளாற் சான்றோர்—உரையிசைத்துச்
செய்யுள்நூல் செய்யச் சிறியேன் றுணிவுற்றேன்
வையுள்போ மாறு பரிந்து.

## வழிபடுகடவுள் வணக்கம்.

அறியாமை யென்னு மசுரர்படை வாட்டிச்
சிறியேனை யாட்கொண்ட செவ்வேள்—வெறியாம்
கடப்பமலர்த் தாரணிந்தான் கான்மலர்கள் சன்மத்
தொடக்கறவே வாழ்த்துகவென் சொல்.

## ஞான குருவணக்கம்.

உண்மையறி வானந்த வாரிதியின் மூழ்கியுல
[குய்யக் கொண்ட
வண்மையலா தறியாத நெஞ்சுடைய ராமகிருஷ்ண
[மறையோர் பாதம்
பெண்மையலி யாண்மையெனு மும்மையினு மடங்காத
[பிறவியெய்தித்
தண்மையலை யருட்கடலிற் படிந்தெழுவான் பணிந்துதுதி
[சாற்றுவோமே

## வித்யா குருவணக்கம்.

அமிழ்துறழு மொழியெனப்பன்னூட் டவரும் புகழுமியல்
(பமைந்த தூய
தமிழ்புகட்டிச் சிறியேனை யாட்கொண்ட பெருந்தகைமைச்
(சான்றோ ரான
கமழ்கமல மலர்டிணையும் பனைவர்குலக் கடற்றண்ணங்
(கதிரே போன்ற
தமிழ்மணக்கு முகங்கொள் திரு நாரணவா ரியர்பதங்கள்
(தலைக்கொண் டேனே

## நூல்.

புவியினிற் பலவாங் கொள்கைக ளவற்றுட் பொருந்திய
[பொருள்பரம் பொருளாம்
நவையறும் பொருள்தான் ஏகமென் றறியும் அறிவது
[நல்லறி வாகும்
சிவனரி யயன்வெவ் வேறெனப் புகலுஞ் சிறுமையே
[பேதமை யாகும்
நவநவமாய பொருள்தரு மறைகள் நான்கினுட் கருத்துமா
[மிதுவே

## வேறு.

இருட்டறையிற் புகுந்திருடன் றனக்குரிய நிதிக்குவியல்
[எதிருங் காறும்
மருட்டுறவே யெதிர்ப்படுபல் சிறுபொருளும் பயனிலென
[வரைதல் நேர
அருட்குருவின் றிருவருளாற் பரம்பொருளை யடையமுயல்
[அடியன் றானும்
பெருக்கமுறா பொருள்பலவும் புறக்கணித்தோர் பரம்
[பொருளைப் பேணு வானே

## வேறு.

மண்முதற் பூத மைந்தின் மயக்கினு லியன்ற பொய்யிற்
பெண்முதற் பொய்த்தோற் றங்கள் பிறவுமுண் டுண்மை
[யாமோ
எண்முதற் கெட்டா 'நான்' இங் கிவைதமுள் இயைந்தே
[னல்லேன்
கண்செவி மெய்வாய் நாசி நானலா திருத்தல் கண்டேன்

இக்கலி யுகத்தில் வாழ்க்கை யூணினு லியன்ற தாயும்
மக்கள்தம் வாணாள் தேய்ந்தும் மதிநுட்பம் அமைதி வாய்மை
தக்கவர்ச் சேர்தல் அற்றும் சடப்பொருளாசை மிக்கும்
புக்கதால் ஞான யோகம் புரிந்திடல் எளிதன் றுமால்

# சமரச சித்தாந்த போதினி

குணத்தினு மளவி னாலுங் குறைவறு மறிவு மூன்றாம்
இணக்கிய வுலக ஞானம் இற்சிறு விளக்கம் போன்றாம்
குணக்கறு மன்பர் ஞானம் குளிர்மதி போன்றாம் ஐந்தும்
வணக்கிய விபவ ஞானம் கதிரென வயங்கு மன்றே.

கருப்பூரங் கொளுந்தி நின்றாற் காண்பதங் கொன்று மில்லை
விருப்பூர விடந்த ராமல் மிக்கநற் சமாதி பெற்றால்
கருப்போக விரியும் புட்போற் சார்ந்த 'நான்' 'நீ'யி னோடு
பெருப்போக வுலகந் தானும் பிரிந்திடு முண்மை கண்டாய்

ஒன்றெனு மெண்ணை யொட்டி யுயர்ந்த பல் கோடி யுண்டாம்
ஒன்றெனு மெண்ண ழிந்தால் ஓடுமே கோடி யெல்லாம்
ஒன்றுள துலக மெல்லாம் உண்மையஃ துணர்ந்து கொண்டால்
ஒன்றறு முலகத் தோற்ற மொடுக்கமா மிடமுங் காண்பாம்

ஆசையுன் றற்ற நெஞ்சா லறியலாம் ஈசன் றேற்றம்
காசிலா வாழ்க்கை யாலே கரிசறுத் துயர வேண்டும்
தேசுலா மறிவான் முன்னோர் செய்தவிச் செயலை நாமும்
பேசுநான் முறையா லோர்ந்து பெரிதெனப் பழக லாமே

இன்பமுந் துன்பந் தானும் இருவினைப் பற்றும் என்றும்
வன்பொடும் ஆன்மா தன்னை மயக்குறும் வலிய வல்ல
என்பொருள் உடலும் நானே என்றிருப் போர்கள் பாலே
புன்புகை வெளிபற்றாது சுவர்பற்றல் போலா மன்றே

நித்திய அறிவும் இன்பும் நிறைவுற முயல்க வாங்கே
நித்திய வறி வானந்தம் நின் னுழை நிலைத்தல் காண்பாய்
பித்தெனு முலக வாழ்விற் பிரிந்து நெஞ்சுயர்ந்த ஞானப்
பித்தினின் மூழ்கு மாயிற் பிறக்குமாங் குயர்பே ரின்பம்

உலகினிலை கனவினிக ரெனவுணரு ஞானியவன்
உள்ளத்து ளுணர்வினொளிதான்
ஒருபொழுது முறைபிறழ்வ தறிவரிய சுரநதியின்
ஒழுகலா றெனவொழுகுமால்
அலகில்பர வெளியினிடை யுலவிவரு மொருபெருமை
யன்றியவ னென்று மறியான்
ஆன்மாவி னிலயமிசை யவன்வாழ்வ னுலகமயல்
ஆழியையும் எல்லைகாண்பான்
மலைகடலில் மலரில்வளர் மறைமுதல்வ னுருவினை
வரதமகி ழன்பன் மனமோ
மறுகுமொரு கணமுருகு மருளுமழு மெழுமலையும்
வசமவச மிருமையுளதாம்
அலையின்மிசை யலைபனியி னுருவமென வவனமல
வொழியிடை மூழ்கிநீந்தி
அதிரவரு சுரநதியி னிலைகுலையு மெனினிகர
வவனிமிசை யினிதொளிர்வனே

## வேறு.

உடுக்கணம் விளக்கஞ் செய்யூ வும்பரி னிரவிற் றோன்றும்
அடுத்தவை பகலிற்றோன்றாத் தன்மையா லழிந்த வாமோ
மிடுக்குளாய் மனித னீயே விமலனைக் காணாக் காலை
எடுத்தபன் மொழியா லீசன் இலனென வியம்ப லாமோ

## வேறு.

சேய்மை நின் றொளிர் செங்கதி ருருவினிற்சிறிய
தாய்வி ளங்கிப தோற்றநேர் தரப்பர மான்மா
தூய்மை யானந்த வாரிதி யாயதன் சுருவம்
வாய்மை நீத்தவர் காண்கிலா வகைகரந் திடுமால்

நாணல் சைவல மூடிய குளத்தினீர் நடுவிற்
காணல் துள்ளிய மீன்கண மரிதது கடுப்ப
வேலை வாவொடு மக்கள்நெஞ் சயர்தரு விமலன்
வாணி லாநகை மாயையின் மறைந்திடு மாதோ

## வேறு.

உவரிநீர் குளிர்வுற் றுறைபனி யாகி யுறுதியாங் கட்டியு
[மாகும்
தவரித யால யத்தமர் பரனுஞ் சச்சிதா னந்தகல் லுருவில்
அவிருவ னுறுதி யாம்பனிக் கட்டி யம்புவி னிடைமிதந்
[திடல்போற்
சிவமுமாய் உருவாய் அருவமாய் மறைவன் சிறுமையும்
[பெருமையு மிலனே

## வேறு.

அனகனெனும் பிரமப்பே ராழியிடைப் படிந்துவரு மமுதக்
[காற்றால்
சனகசன தனர்முதலோர் தமைமறந்தார் நாரதரும் தரிசித்
[தேத்தி
அனவரத மிசைபாடி யலைதருவர் சுகதேவ ரள்ளி மாந்தி
மனமிறந்து நடமிடுவர் மறைப்பிரம வாழியெல்லை வகுக்க
[லாமோ

## வேறு.

கடனீரைச் சேய்மையிற் காண்கையிற் றோன்றுங் கரு
[நிறமாய்
மடனீரை யாய்வின்றிக் கண்ணா னிறத்தினின் மாய
[னென்னை
படநாகப் பாயலன் போற்றி நெருங்கிற் பளிங்கனையன்
கடனீரு மாறிக் கரத்தினில் வெண்ணிறங் கண்டிடுமே

## வேறு.

மறைநான்குஞ் சாத்திரங்க ளிருமூன் றும் புராணத்தின்
[வகைமூவா றும்
பொறையான்ற மாதவரும் பிறருமுறை முறைபயின்ற
[பொருளைக் கொண்டு
கறைசேர்ந்த வெச்சிலெனக் கழறுநிலை யடைந்தனவாற்
[கடவுடானும்
குறைதேய்ந்த நிலையினனாய் ஒருசிறிது மறுவின்றிக் குலவு
[மன்றே

## வேறு.

விழுமிய வறிவின் முதல்வனும் பிரமம் விமலனும் பிரமமாம்
[சிவமாம்
கெழுமிய வன்பின் மகளிரும் தாயும் கிரிஜைபின் ரமணனும்
[பிரமம்
ஒழுகிய விசையிற் குழலிசை கண்ணன் உருவமிங் கிவை
[யெலா மிவையும்
வழுவிய நெறிசெல் பதகனும் பிரமம் மாதவ யோகியு
[மதுவே

கோவையி னியைந்த மலரினம் விழையேன் குறைவற
[வற்றினை யியைக்கும்
பாவிசை சீர்த்தித் தந்திரம் விழைவன் பரமனும் அந்நிலை
[புலகில்
பாவையில் நிலனில் மணியினிற் சுழலும் பயோததி யிடை
[யினில் நிலவும்
ஓவிய வியையில் இயைத்திட லாகா வுருவமு முடையனு
[மவனே

## வேறு.

மாதவர்பால் அலோதி மனமொடுங்கித் துறக்கவரு
மாதவனை ராகவனை வசிட்டமுனி யெம்பெருமான்
பூதலய மாகுமிடம் பூதலய மாவனவன்
காதல நீ துறந்தியெனி னனைத்துந்துறந்தி கழறியென

மாமுனியே யுலகமெலாம் மாயையிடை மயங்குறுமால்
கோமகனும் உழன்றிடுதல் கொடுந்துயராங் துறந்திடுவேன்
நாமதமே வென்றிடுவன் மன்றிடலுந் தவமுதியோன்
நாமவுரு வற்றபொருள் நானிலத்தி லில்லைகொலோ

பரம் பொருளில் இடமுளதோ பரம் பொருளில் வினை
[யுளதோ
பரம் பொருளை மறந்தன்றோ பாருலகு துறந்திடுதல்
பரம் பொருளொன் றுளதுண்மை பாருலகு முயிருமெலாம்
பரம் பொருளே யாகுமிது பழயபுது மெய்யென்றுன்

## வேறு.

கற்பக தருவி னீழலி லமர்ந்து காவலன் பதவியி லுறவும்
பொற்புறு மடந்தை மணக்கவும் நிதியம் பொழியவு
[நினையிலாங் கடையும்
அற்பனோர் வேங்கை யெனையறைந் துனுகென் றறைந்திடி
(னதுபடு மிவைபோல்
அற்புத னிமல னைவர் நினைவிற் கமைந்தன வருளுத
(லமைவே

## வேறு.

வாழ்விற் பெரும்பகுதி வாரி யிறைத்த பினர்த்
தாழ்விற் புகுதாமே தம்பிரான் பாலடைந்தாய்
சூழ்விற் பயனுளதோ தொண்டுமனம் பற்றியிருள்
போழ்விற் பெருமான்பாற் புல்லெ லெளிதன்றோ.

## வேறு.

உருவமு மருவந் தானு முருவரு வென்னு மூன்றும்
ஒருவனே கொண்டு ளானிவ் வுண்மையை யுணர்தல் ஞானம்
எரியில தென்னிற் சூடும் ஒல்லின்றிக் கதிர்கள் தாமும்
ஈரமியின் பயமின்றாயின் வெண்மையும் தோன்ற லுண்டோ

## வேறு.

எவ்வழியும் நீர்நிறைந்த எரிநிகர் பிரமமென எண்ணாய்
(ஓர்பால்
கவ்விய சீதள நிறைவால் உறைபனியாய்த் தோன்றியவண்
(கதிரோன் வந்தால்
அவ்வணமே நீராகி யுருகுதலுங் காண்டியன்றே அதுபோல்
(ஈசன்
பவ்வியனு ளுறைபனியாம் உருவருவாய்த் தோன்றிடலும்
(பான்மைத்தாமால்

## வேறு.

ஆகாய மில்லா வனலும் விளக்குவதாய்
வாகாய தோற்றமுற வந்தடையு மோர்பொருளை
ஏகா காரப்பொருளும் எங்கு மிடமிலதாய்
பாகா யுருகுமன்பர் பாணின் றொளிருமன்றே.

## வேறு.

ஆடும்பாம்பு மசைவறு சர்ப்பமும்
ஈடில் மாயையும் ஈசனு மொக்குமால்
கேடில் சித்திக் கிரியையே மாயையாம்
தேடு மீசனும் நிட்கிரியை செப்பினே

விண்ணில் மேகம் விரைவினிற் றோன்றியே
கண்ணில் ஞாயிறு காணக் கரத்தல்போல்
எண்ணில் ஞான மிறைப்பொழு தேகிட
வண்ண மாயையும் மாயங்கள் செய்யுமே.

இறைவன் சக்தி யிதுவென் றறிந்திடா
திறைவன் றன்னை யெதிர்தலு மாங்கொலோ
மறையி னின்ற மறையினை மாயைதான்
அறைத லின்றி அறிதலு மாகுமோ.

களவு செய்பவன் கண்டது மோடல்போல்
தெளிவு கொண்டு தெரிந்திடில் மாயைதான்
ஒளியு மோடு முயர்பர ஞானமே
கொளவு மாயையைக் கோற லியலுமே.

படிகந் தன்னிற் பரிதியின் செங்கதிர்
கடிதில் ஏழு நிறங்களுங் காட்டிடும்
படியின் தோற்றம் பரமன்கை வன்மையே
அடிமைத் தொண்டன் அறிதரு மெய்ம்மையே.

## வேறு.

ஆளியுருப் பொய்க்கோலம் பூண்டொருவன் சிறுவர்களை
(யச்சு றுத்துங்
கோளரியைய மாயையிடை மறைபிரமம் அறியாரைக்
(கொடுமை செய்யும்
ஆளியல்பில் முறைபணியு மறிவறிந்து மாயையினை யகற்றல்
(செய்வான்
தாளருளு முதல்வனரு ளுருவமன்றி வேறெதற்குந்
(தாழ்ந்தி டானே.

ஓதிமமே நீர்பிரித்துப் பால்பருகும் பிறபறவைக் கொண்ணு
[தாகும்
ஆதிபரம் பொருளினையும் அறிவறிந்தான் அறிவன்
[மற்றோர் அறியலாகா
சாதிமத பேதமிலாப் பரம்பொருளைப் பொருளிடமும்
[சார்ந்ததேனும்
வாதிமுத லோரறியார் மனமொருங்கத் தொழுதுகண்டு
[மகிழ லாமே.

ஆரவிட முடையதெனும் அதற்கழிவவ் விடந்தன்னு
[லமைவதில்லை
உரமிகுமவ் விடந்தானே யுலகிலுள பலவுயிர்க்கு முறுகண்
[செய்யும்
பிரமமுமம் மாயையிடைப் பிறங்குமெனு மதற்சுதனுற்
[பிழையில்லை
சரமசர மிரண்டினையும் பற்றிமிக வருத்துமிது சரதந்தானே

பூசைதனை குட்டிகளைப் பன்னகத்தாற் பற்றிடினும் புரட்டல்
செய்து
வீசினும்வாய் கௌவுகினும் அவைவருந்த விலையாங்கே
[மெய்யன் புள்ளோர்
ஆசைமுத லற்றனரா யமைந்திடலால் மாயையினு லல்ல
[லெய்தார்
ஈசனிடத் தன்பிலரே மாயையினுற் பிணிபட்டிங் கிடுக்கண்
[கொள்வார்

மாயையினைக் காணவெண்ணி மருளுகையிற் சிறுமுனிநீர்
(மங்கையாகித்
தாயுருவ மடைந்துபல குழவிகளின் றாயையிற்றுறந்
(தானுண்டேக
நாயமிலா விவ்வியல்பே மாயையியல் பாகுமெனை நாலறிந்
(தேன்
மாயமுறு மித்துயர நீங்குதலே ஞானமென வழுத்தலாமே

## வேறு.

சச்சிதா னந்த தருவினைச் சார்ந்து தசரத ராமனேர் பலரும்
அச்சுதா னந்தக் கோவலர் பலரும் அறிவனும் புத்தனேர்
(பலரும்
நிச்சய ஞான முகம்மது பலரு நிறையருட் கிறிஸ்துமார்
(பலரும்
மொய்ச்சிருந் தருளின் சலதியிற் றிவலை முழுங்குறப்
(பொழிகுவர் நிலத்தே

திசைபல விளக்கும் விளக்கமும் நிலையாம் சிறியிடம்
(விளக்குவ திலைகாண்
வசையறு மறிவும் ஒழுக்கமும் படைத்த மாதவ னிகரவதார
விசையுள புனிதர் பிறந்தநாட் டகத்தி லிசைபெறு
(தன்னியதேசத்
தசைவிலாப் புகழை யடைந்திடல் காண்டும் அதிசய
(மில்லையா மிதுவே

மதகரி புறத்திற் றோன்றிரு தந்தம் வாயிடை மறைந்துள
(தந்தம்
விதமிரண் டாக வுடையதா மதுபோல் மிகுமவ தாரமாம்
(புனிதர்
பதமுற வுலகில் முக்குண மயமாம் பல்லுயி ரினத்தொடு
(பழகும்
பதமுமே னிலையின் ஞான வா னந்த பத்தியி னமைதியு
(முளரே

வேறு.

வாரிவள மறுத்த பொழு துவர்க்கூவல் குளங்கள்பய
(மயமாய் நிற்கும்
வாரிவள மிகப் பெருகி லுலகமெலாங் குறைவின்றி
(வளங்கள் பொங்கும்
ஆரியராம் புனிதரவ தாரமுறுங் காலத்தி லவனி யெல்லாம்
நேரியதா முத்தியுற லெளிதாகும் பிறநாளி னில்லை
(வேறே

மலைபோல நாற்றிசையு மதில்சூழ்ந் துளகம்புகுத வழியின்
(றாய
நிலைபேறு பெறநினைந்த நால்வர்முயன் றரிதறிந்த நீண்ட
(ஏணி
கலையாது நிறுத்தியது கண்டுமகிழ்ந் தனர்புவ்வர் கடிதுட்
(சென்றார்
அலையாத சிந்தையனுப் ஒருவன்வெளி யிறங்கியத னருமை
(சொற்றான்

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

அகம்புகுந்த முன்மூவர் முத்திநிலை வழியறிந்தங் கடைந்தா
(ராவர்
அகம்பொதிந்த பொருள்தெரிக்கக் கீழிறங்கு மவன்புகழ்க்
(கோ ரவதி யுண்டோ
சகம்பதிந்த மாயையிரு ளகற்றியிவ னுடலெடுத்துச்
(சார்ந்தார் யாரும்
அகம்பிதிர்ந்த பிறவியறுத் தமலனரு ளடையவரு
(ளாசா னாமே.

விருக்கமொன்று நதிப்பெருக்கில் மிதந்துவரி லதைப்பற்றி
(மிகுந்த புட்கள்
வருத்தமின்றிக் கரைசேரும் நாணல்மிதந் திடுவதனை
(வலிவிற் பற்றல்
பொருத்தமிலை பிழைத்திடலு முறுதியிலை புனிதவவ தார
(மூர்த்தி
ஒருத்தர்வர வுலகமுய்யும் சித்தர்பலர் தத்தமக்கே யுறுதி
(கொள்வார்.

## வேறு.

கதிரொடு திங்கள் கலந்தொளி செய்யுங் கலப்பொளி சிற்சில
(காலம்
அதிசயமாக வுலகினிற் றோன்று மாங்கது சேர்த்திட ஞானம்
முதிர்தரு பக்தியெனு மிரண்டினிலும் முதல்வராய்க்
(கிருஷ்ண சைதன்ய
யதியினுக் கிணையாய் அவதரித் திடுவோர் இவ்வுலகத்திடை
(யுளரே.

## வேறு.

மறைபல வறிய லாகா மறைபொரு ளாய தேவை
இறைவனை நாடு வாயே லிருந்திடு மிடமு ரைப்பேன்
குறைவறு பக்தி வெள்ளக் குரைகடல் மூழ்கி நிற்கும்
மறைவல மகன்பாற் காண்பாய் மற்றையோ ரிடத்திற்
(காணாய்.

அகண்டமாய்ப் பொழியு நன்னீ ரவனியிற் சிறியவாற்றின்
அகன்றவாய் வழியா யோடி யளவிலாப் பயிரை யூட்டும்
நிகண்டனும் ஈசன் சக்தி நிறையருள் வாய்ந்தார் வாயாற்
சகம்படர்ந் தருளே செய்யும் தத்துவப் பொருளீதாமே

நீருநீர்க் குமிழி தானும் நிமலனும் சீவன் றானும்
அருமே யிரண்டாய்த் தோன்று மாயினு மவையொன்
(றென்பார்
நீரிலே பிறந்து வாழ்ந்து நிலையிலாக் குமிழி மாயும்
பேரிலாப் பிரமப் பாலே பிறந்துவாழ்ந் தழியுஞ் சீவன்

காந்தமே யீச னாகும் கரும்பொனா முலகிற் சீவன்
சாந்தனே னிழுத்தா னில்லை சராசரப் பொருளை யென்னில்
காந்தமே மண்டூ ணொன்ற கரும்பொனை யிழுக்குஞ் சொல்லோ
சாந்தனு மாயை யூடும் சராசர மிழுத்தல் செய்யான்

வேறு.

மண்வி லங்கிடின் வந்து கரும்பொனைக்
கண்வி லங்கிடக் காந்த மிழுத்திடும்
திண்வி லங்கெனு மாயை தெறித்திடின்
எண்வி லங்குற வீச னிழுப்பனே.

வேறு.

அனந்தனு மிறைவன் றன்னை யந்தமா மியல்பிற் சீவன்
நினைந்தன னெய்த லெங்ஙனிகழ்த்துதி யென்னிற்
(சொல்வேன்
கனந்தன தாகா வுப்பின் பாவைதான் கடல்போ மாறு
மனந்தனி லிறந்து பெம்மான் மலரடி சேர்த லாலே.

## வேறு.

குடிகள்தரு கையுறையைக் கோமகனோர் செல்வனெனுங்
(கொள்ளா நின்றான்
அடியார்தரு திரவியமும் அன்பினொடு தரப்பெறுங்கா
(லமலன் கொள்வான்
நெடிதுபொழு தெமதுபொருள் எப்பலனைத் தருமெனவும்
(நினைதல் செய்யா(து)
அடிமைவணங் குதல்கடமை யெனவறிந்து கொடுத்த
(பொருள் அமலற் காமே

## வேறு.

கதிரவன் கதிர்கள் எவ்வுழியுறினுங் கனற்றுதல் கடனெனக்
(கொளுமால்
புதியகண் ணாடி மெருகிடு முலோகம் புரைதவிர் நல்லநீ
(ரிடத்தில்
அதிகமா யொளிரக் காண்குறு மன்றோ அமலனா ரரு
(ளொளியதுவும்
துதிசெயு மன்பர் மனத்திடைத் துலங்கும் பிறவிடைத்
(துலங்குதல் இன்றே.

உண்மையன் புள்ளோன் இறைவனை யுயிர்க்கோ ருறு
(துணைத் தலைவனாய்த் தாயாய்
வண்மை நண் பனுமாய்த் தந்தையாய்த் துணையாய்
(மதித்திட லியல்பெனும் தாயாம்
பெண்மையாய் மதிக்கு முறையுணர் வொன்றே பெருகிய
(வானந்தம் விளைக்கும்
திண்மையுள் அன்பிற் சிறந்தவள் தாயே தெரிந்திடும்
(இறைவனும் அதுவே.

இறையவன் றன்னோ டிரண்டறக் கலக்கு மியல்பினை
(யின்னதென் றியம்பிற்
குறைவிலன் புடைய சேவக னொருவன் குணச்சிறப்
(புடைமையாற் றலைவன்
முறைசொலி யழைக்கப் பதவியு மருள முன்னுவன்
(ஏனையோர் முன்னர்
அறைவனிங் கிவனே மகனெனக் காமென் றனது
(போன்றிடு மிதுவே.

## வேறு.

குருவு மீசனு மொன்றெனக் கொள்ளுவான்
மருளி லாத மனத்தடி யானெனிற்
குருவு மீசன் குரைகழல் காட்டிட
மருவு தெய்வமா மற்றிலை காண்மினே.

சீட னாபவன் தெய்வக் குருவெனக்
கோடல் வேண்டும் குருவெனும் தெய்வத்தைத்
தோட மாய்ந்து துயர்ப்படு வானெனில்
மீட லின்றி விழுந்திடு வானன்றே.

அறிவ றிந்திட ஆர்வமு ளார்சிலர்
அறிவ றிந்தவ ராய்நடிப் பார்பலர்
குறிசொ லுங்குரு வாயிவர் கூடுவர்
செறித லின்றித் தறிந்திடச் சீடரே.

மனங்க சிந்து வணங்கலும் பக்தியும்
நினைந்து முன்செலு நெஞ்சமு முள்ளவன்
கனங்க வின்ற கடவுட் குருவினாற்
பிணும்பி றவியில் பேறுற் றிடுவனே.

## வேறு.

ஈரநதியி னோர்வர்பொருள் சொல்லும் பரமகுரு
வரநதியில் அசங்கியங்கள் வந்துங் குறையிலையால்
வாமருளு மாதவரை வைது பழித்தாலும்
வரவிலையா மற்றவர்க்கு வாய்ந்த பழியெனவே

மனித குருமகா மந்திரத்தை யோதுவிப்பார்
அனக குருவருள்வர் ஆன்மாவின் சைதன்யம்
நினைவில் நினையவொரு நின்மலனை நேர்குருவாம்
தினமு மவர்புகழே செப்பித் திரிதல்நன்றே.

## வேறு.

அரச னாணைப்பத்திரத்தை யடைந்தா னொருசே வகனதனால்
உயரியசல் நிலைமையுறுகின்றான் உபதேசகனாய் வருமவனும்
அரைசர் தலைவ னமல னருளு மாணை யுடையனேற்
புவியில் புகழும் பதமுமுறப் போவ னிதுமெய் யாமன்றோ

நன்றே மலர்ந்த மலரின்மணம் நாடி யறுகால் கணுகுமவண்
ஒன்றாய் இனிய பணிகாரம் உள்ள இடத்தில் எறும்
(பணுகும்
பொன்று நிலைமை பெறுமவன்பாற் புவியின் வாழ்வோர்
(புகுந்தவன்சொல்
என்று மிதாம் கேட்டின்புறுவர் இவன்போய்ப் புகல
(வேண்டாவே.

தானே யறியாப் பொருளொன்றைச் சாற்றிப் பிறரை
(யுய்விப்பேன்
யானே யென்று முனம்வருவோன் எதையோ புகல்வான்
(உலகத்தீர்!
வானே நிகரும் பரம்பொருளின் வாரி நீரில் ஒருதுளியை
ஊனேய் பிறவி யொழியநுகர்ந் துய்ந்தான் பிறரை
(உய்விப்பான்.

விளக்கி னொளியை நுகருதற்கு விட்டில் பறந்து விழுந்த (தெனத்
துளக்க மகலு நிலையுடைய தூய குருவை யணுகியவர்
கிளக்கு நெறியின் முறையின்று கேடில் பதமும் பெறலாகும்
அளக்க ரிகரு மருட்குருவை யறிந்து போற்றல் (எளிதன்றே

## வேறு.

தொழுதுகை வணங்கத் தெய்வத் தோற்றமில் கோயில் (போலப்
பழுதுறு மனத்த னாய்நின் றரும்பொருள் பகர்த லாமோ
எழுதுறு முருவ மில்லா விறைவனை யுளத்துட் கொண்டு
பழகுவை யாயிற் பின்னர்ப் பலரையும் வசிக்க லாமே.

அன்பெனுங் கடலு ளாழ்வார் அருள்வெளத் தழுந்தி (நிற்பார்
இன்புறு ஞானவைராக் கியங்களில் இயைந்து நிற்பார்
அன்பனை யெங்குங் காண்ட லரிதெனும் அறிந்த நூலால்
வன்பராய்ப் பலசொற் சொல்ல வருபவர் எண்ணி லாரே

## வேறு.

பொருள்சிறந்த தனவணிகன் பண்டகசா லையிற்பொருள்கள் (போர்போ ராகத்
திரள்வதுவு மெடுத்துநிறைத் தளப்பதுவும் தெரிதருவாம் (சிறிதாம் செல்வன்
தருபொருளும் பண்டமுடன் மிகச்சிறுமை நூலறிவாற் (றன்முன் வந்தான
பிரமமுண ரான்அவன் செகல் பெருக்கெடுத்த வியலாதாம் (பிழைபு மிக்கே.

தேரையொன்று நீரரவின் வாய்ச்சிக்கி வயிற்றகத்தும்
(செல்லா தாகி
ஆரொருற் றிடனிகர அறிவறியா துபதேச மறைய வந்
(தோன்
பாருலகிற் பெரும்பிழை தன்னுடனே மற்றையரைப்
(படுத்து விப்பான்
தேருமுணர்ப் பேசுவதோர் பொருளுண்டோ பரம்பொரு
(ளோச் செப்ப லாமோ

## வேறு.

வைத்தியர் மூன்று வகையினர் கடையர் மருந்தெடுத்
(தளித்தும் மறப்பார்
வைத்திய முடைய பிணியினன் பக்கற் பரிந்திருந் தூட்டுவர்
(இடையர்
வைத்திய மகலக் கால்கர மழுக்கித் தாமிருந் தூட்டுவர்
(முதல்வர்
வைத்தியல் புடையார் கடையரா முதல்வர் கருணையி னுருவ
(மா யுள்ளார்

கடையரா நிலையர் சொல்வன சொல்லிக் கழன்றனர்
(பிரிந்திடு பவராம்
இடையரா பவரோ பரம்பொரு ளிலையை யிற்றென
(வுற்றுறத் தெரிப்பார்
தடையறு மெள்ள வருள்பொழி முதல்வர் சாற்றுறு
(பொருளினைத் தமையால்
இடையறு தடுத்துப் பலமுறை கிளந்திட் டிடித்திடித்
(துணர்த்துவர் உயவே

## வேறு.

எண்ணில்நூல் கற்ற மட்டில் இறைவன்சீர் அறிந்த தாமோ
மண்ணில்மா மழைபெய்நாளை வகுத்திடு பஞ்சாங் கத்தை
நண்ணிநாம் பிழிந்திட் டாலும் நல்லநீர் காண்போ மல்லேப்
வண்ணநூல் பலவாய்க் கற்றும் வறுதலில் தெய்வத் தோற்றம்

மலர்நிறை மதுவுண் வண்டு மதுகர் காறுஞ் சூழ்ந்து
புலர்தர வின்றிப் பாடும் புதுமது வுண்ட தாயின்
நலமுற வமையும் ஆங்கே நம்பனைத் தேடா நிற்பார்
அலமரல் பாடல் செய்ய வறிந்தவர் அமைந்து வாழ்வார்

## வேறு.

நாவலி படைத்துப் பரம்பொருள் நிலையை நலமுற மொழி
(தரு மொருவன்
யாவனே யெனினும் அவனை மிகவும் இனியவ ருடைய
(தாம் அன்னோன்
தாவறு முலகில் உயிரையுய் விக்கச் சாற்றிடும் தானும்
(வழியை
மூவறு முயறல் ஒழிந்திருந் தனினும் உயர்வுறு முண்மையா
[மிதுவே

கல்வியின் செருக்கும் பொருள்பெறு மதமுங் கணித்திடக்
(கொண்டவன் பெரியார்
நல்வழி புகல்வார் எவ்வயிற் செலினும் நலம்பெறு மவர்புகழ்
(பரவும்
இல்வழி யுறலும் துயர்தவிர்த் திடுவோர் என்பது முணர்
(கிலன் என்றும்
புல்லறி வினர்க்கு நல்லன சொலினும் புன்மைதீர்ந் திடுகலு
(முண்டோ

அகத்திலும் புறத்துங் காணங்கள் ஒருங்க வறிவினை யறிந்
(திட முயல்க
சகத்திலும் விண்ணிலும் சலத்திலும் பொருளாய்ச் சஞ்சரித்
(திடுமது பொருளாம்
இகத்தினிற் பரத்திற் கிசையந்தன வருளற் கிதுவன்றி
(யொருபொரு ளேதோ
உகத்தினைச் சிறிய வினையெனப் பொழு தாக்கு முயர்புறுத் தக
(வண்ண வுணர்க.

## வேறு.

பழிதவிரு நூல்பலவும் பரம்பொருளை யறிதற்காம்
வழிபுகல்வ பொருளறிந்தால் மற்றவற்றால் யாதுபயன்
இழிதகவில் நிலைநின்றே யிறைவனருள் பெறவறிந்தால்
மொழிசிறிது மதியானும் மோனவதம் பூண்பானே.

மாங்கனிகள் தினப்புகுந்தான் மாக்கணக்கும் பழத்
(தொகையும்
ஆங்கவைகள் வளர்முறையும் அறிந்திடவே முயல்வானோ
பாங்குடைய பரம்பொருளைப் பணிந்திடவே துணிந்தவ
(னும்
ஈங்கவிதை நூன்முறைகள் தேடிடுதல் தவிர்வானே.

விண்படர்வ கழுகுபருந் துயர்வடைந்தும் விழிநோக்கம்
எண்படர்தல் புலைப்பிணங்கள் இருந்தவிடு காடதுபோற்
பண்டிதர்பன் னூலறிந்தும் பரம்பொருளாய்ந் தறிகிலராய்
மண்டுலக மாயையிடை மனம்புகுத்தி மயங்குவரே.

## வேறு.

அன்பி னிலையிற் படருபவன் அமலன் பாலே தனையளித்து
வன்பில் புரைநீக் குருவையென வழிபா டியற்று முறை
(முறையே
இன்ப ஞான நெறிபடர்வோன் யானே யறிவன் பொருளை
(யென
முன்பு படர்வான் முசுக்குருளை முயன்று பற்றி யிடல்
(போன்றே.

## வேறு.

வைகறையிற் கடைந்தவெண்ணெய் மாதுரிய மிகவுடைத்
(தாம்
வைகல்நடு வுறக்கடையில் மாதுரியங் குறைவுறுமால்
வைகறையிற் பெருவாழ்வின் நலமறிந்தோன் துறவினிலும்
பொய்கறையிற் சிறுபொழுதிற் புகுந்துறவு வீறுடைத்தே.

## வேறு.

நிலவரையை யணுகறவிர்ந் தும்பரிடை நிலவிமகிழ் நிலை
(யிற்றுகப்
புலவர்புகல் ஓமையெனும் பறவைபெறு சினைநிலத்தைப்
(பொருந்தாதாகி
அலர்தலைய காயமிசை யிறகடைந்து பறந்திடுமா மதனைநேர
அலகில்புகழ் பெறும்பெரியார் கருவிலே திருவினராய்
(அவதரிப்பார்.

## வேறு.

மகப்பேறு பெறக்கருதி மனமழுங்கி நிற்பர்சிலர்
மகப்பேறு பெறவிழைந்து சோர்வுற்று வீழ்வர்சிலர்
தகப்பேறு நரற்குரிய தலைவனருள் பெறவுலகில்
அகப்பேறு பெறுதற்காய் அழுங்குபவர் சிலரிலரே.

## வேறு.

தனைநினைந்து வருசிறுவர் அமைதியுறச் சிறுபொருள்கள்
(தருவள் நற்றாய்
நினைவிழந்து புறந்திரியும் குழவியினைத் தேடலிலள் நினைந்து
(முன்வந்
தனையருந்த வமுதருள்க பொனைவருவோற் கருள்புரிவன்
(அதனைநேரத்
தனைமறந்து தனைநேடும் அனையனுக்கே நலமருள்வான்
(தலைவன் றனே.

நீர்வேட்கை மிகவுடையான் நெடுந்தூரம் நடந்தேகி
(நிற்பா னல்லன்
பார்தோட்டுக் குளங்கிணறு படைப்பித்து நீரருந்தப்
(பார்ப்பா னல்லன்
ஆர்தொட்டு கிடைத்திடினும் அழுக்குடைய தெனினும்
(மகிழ்ந் தருந்துவானும்
சேர்வேட்கை யுடன்பொருளைத் தேடுபவன் வேறொன்றும்
(சிந்தி யானே.

குறைவறுகற் புடையவடன் கொழுநனிடம் கொளுமன்பு
(கோடி யாக
நிறைதருநற் பொருள்விழையும் உலோபிநிதி நிலையகத்தில்
(நிறுத்தும் ஆசை
மறைவுபெறு மாயையிடை யுழலுபவர் உலகாசை வருமிம்
(மூன்றும்
கறைதவிர நிலைநிறுத்திப் பத்திசெய்தாற் பரம்பொருளைக்
(காண லாமே

அறிவுருண மமைதிபொறை நிறையுறுதி யெனுமிவற்று
(ளொன்றோராவார்
சிறிதளவும் வீண்பெருமை கருதாது பணிவினொடு சிறப்பே
(பூண்பார்
அறிவுருண மமைதிபொறை நிறையுறுதி யெனுமிவற்றை
(யறியா தாரோ
சிறிதளவும் பணிவடக்கம் பயிலாது கருவித்துத் திரிவா
(ரன்றே.

மாசுபடர் பளிங்கினிடம் செங்கதிரின் பிரதிபலனம்
(வருதலில்லை
ஈசனரு ளமையாதாம் மாயையினால் இடருறுவார் இதயத்
(துள்ளே
தேசுபெறு மாசுதவிர் பளிங்கினிடம் செங்கதிரோன் திகழா
(நிற்பான்
வீசுமருள் மாயையினை விலக்குபவன் பாலீசன் விளங்கு
(வானே.

நினதுமதம் எனத்துணிந்து பிறர்பகரு மதமழித்து
(நிகழ்த்தா தொன்றும்
மனமொருங்கப் பரம்பொருளை யறிந்து வழிவழியே
(வழுத்துவாயேல்
தனதுமதக் கருத்தினிடம் பேரன்பு படைத்தவனாய்ச்
(சான்றோராலே
வினைபுகழு மடையவனாய்ப் பழிதவிர்ந்து வாழ்ந்திடுவை
(மகிதலத்தே.

ஆழ்நீர்க் கிணற்றின் கரைநின்று மதன்பால் வீழா
(னறிவுடையான்
ஆழ்நீர்க் கிணற்றி னிடைவீழ்ந்தே யல்லற் படுவான்
(அறிவில்லான்
தாழ்வார் உலகின் மயலிடையே தம்மை யறியத் திறமில்
(லார்
வீழ்வார் இறைவன் மலரடியில் வீழார் நல்லார் மாயையினே

## வேறு.

கற்றறிந்து பன்னூலைக் கதறிவிளித் தாலன்றி
முற்றறிந்தான் உற்றிடான் முன்னிலையில் எனவெண்ணேல்
சிற்றெறும்பின் சிற்றொலியும் செவிக்கொளுநஞ் சீரியனை
உற்றறிந்து பணிந்தாலே உருக்கமுடன் உற்றிடுமே

அன்பாலும் அறிவாலும் அகற்றிடலாம் மாயையினை
வன்பாலும் துணிவாலும் மாற்றலரி தாமதனை
இன்பாய குணசீரி னிடைப்பாசி வேலியினால்
ஒன்றாது விலகுறும்வே றொன்றாலும் விலகாதே

நெஞ்சால் நினைப்பு நினைவரா வாற்புகல்க
அஞ்சாதுள் ளொன்றும்புறம் வேறு யறையாதே
மஞ்சாநின் வாய்சிவத்தை வாழ்த்துகையில் நின்மனத்தில்
துஞ்சாத பேராசை தோற்றமுறல் தீதாமே.

## வேறு.

விளக்கொளியைக் காணும்விட்டில் இருட்படலம்
(விழையாதாம் விருப்பி னோடு
குளக்குவையில் விழுமெறும்பு பிறிதொர்பொருள்
(நாடாக் கொள்கை போல
இளக்கமுறு முளத்தினுடன் உடலுயிரை இறையவன்பால்
(ஏற்பித் தோனும்
துளக்கமறு நிலையினனாய் நிலையாய பரம்பொருளைத்
(தொடர்வா னன்றே.

## வேறு.

பாலின் வெண்ணெய் புண்மையினைப் பகலிரவும் ஒவிடலாற்
பாலின்வெண்ணெய் பிரிந்திடுமோ பால்தருமோ வெண்
(ணெயினை
பாலின்மோர் தெளித்ததனைத் தயிராக்கிப் பலன்
(பெறல்போல்
நூலின்முறை பரம்பொருளை நுண்ணறிவால் நாடுகவே

## வேறு.

எரியிடையிற் படுமாயின் ஈரமுளா வெரிகரும்பும் எரியக்
(காண்போம்
பரிவுதவிர்ந் துலகமயல் துறந்தவர்பால் அணுகுதலாற்
(பதமி லாரும்
பெரியவராய் அன்பினராய்ப் பிறங்கிடுதல் மண்ணுலகப்
(பெண்பொ னாசை
பிரிவுறவே எரிந்திடலால் எளிதாகும் எனப்புகல்வர்
(பெரியா ரன்றே.

குணக்குன்றக் கூட்டத்தார் பாலடைந்து நலம்பயின்ற
(குணத்தான் என்றும்
பிணக்கொன்று சிந்தையினை வழிப்படுத்திப் பரம்
(பொருளைப் பேணி யுய்வான்
கணிப்பின்றி நீராடி மண்ணையும் களிற்றினையே கயிற்றாற்
(கட்டித்
தணித்தன்றி நல்வழியிற் செலுத்தவிய லாதன்ன தன்மை
(போன்றே.

மதுமயக்கம் போக்குதற்குத் தண்டுலத்தைக் கழுவியநீர்
(வாய்ந்ததாகும்
மதிமயக்கந் தருமூலக மாயையினை யொழித்திடற்கு
(வாய்க்கு நல்லோர்
கதிகெடுக்கும் மூவாசை மயக்கமெனு மதுமயக்கங் கழல்
(வுற் றேடப்
பதிமயக்க வறிவுணர்த்திப் பணிகொள்வார் அவர்பதங்கள்
(பணிதல் நன்றே.

இமயவரை யரயன்முனம் இயற்றுதவப் பதித்தருளு
(மெம்பிராட்டி
உமையவள்தன் தந்தையிடம் சத்தியுருத் தோற்றநிலை
(யொருங்கே காட்டும்
சமயமறிந் தவன்பிரமத் தோற்றமுறக் காட்டுகெனச்
(சாற்றுங் காலைத்
தமைமறந்து தமையடக்குஞ் சான்றவர்பாற் கேட்கவெனச்
(சாற்றினளே.

வேறு.

உலகமயல் வீழாதே யுயர்வுபெற விரும்புபவன்
பலவினையும் பரம்பொருளின் பரமாக்கிப் பற்றறுக
உலகினிடை வாழ்வதுவும் உளந்துணிந்து துறப்பதுவும்
அலகில்பரம் பொருளினரு ளமைந்தன்றி யமையாதே.

பணிபுரியும் பெண்ணொருத்தி பற்றுடையாள் போற்றலைவன்
பணிமணிகள் பாலகரைப் பாலித்தும் பற்றிலாள்
துணிவுபெறப் பரம்பொருளைத் தொடருமன நிலையினளாய்ப்
பிணிசெயுமிவ் வுலகவினைப் பேதமெலா மியற்றுகவே.

சேற்றினிடைக் குளித்தாலும் சிறுமீன்கள் அழுக்கடையா
ஊற்றினிடைக் கமலவிலை யமைந்துமதில் நீர்படியா
தேற்றமுறை யுலகினில்வாழ்ந் திருந்திடினும் சீரியர்தாம்
ஆற்றலுறு மாயையிடை யகப்படா தொளிருவரே

பசுவினுடல் முழுவதுவும் பாலுதிர மயமாகி.
இசைவதெனு மடியினிடை யிலகிவெளிப் படுமாறே
பசுமயமா முலகுயிரைப் பாலிக்கும் பதியாவான்
நசையுறுவார் பணிபுரியுங் கோயிலிடை நண்ணுவனே.

மண்ணாலுங் கல்லாலு மரத்தாலு மமைத்தபொருள்
மண்ணாமோ கல்லாமோ மரமாமோ வெனவெண்ணேல்
எண்ணாலு முய்த்துணர்வுற் றிசைப்பரிய பரம்பொருள்தான்
ஒண்ணாதோ வவைதம்முள் உற்றிருக்கை யெனவோர்ந்தே.

இறையவனைக் கண்கூடா வெதிர்ந்துபணிந் தானொருவன்
மறையுணர்ந்து பல்லுயிரும் வருமுடலும் ஆன்மாவின்
குறைவறுபல் லுருவெனவே குறிக்கொளலாற் சிலைவடிவில்
நிறைதருநற் பொருள்தானும் நிமலனென நினைவானே.

அன்னியரைக் கொலைபுரிய வாயுதங்கள் பலவேண்டும்
தன்னையுடன் படுப்பதற்குச் சத்திரங்கள் வேண்டாவால்
உணரலரும் பரம்பொருளை யொருசொல்லால் உணர்ந்திடலாம்
அன்னதனை மற்றையருக் கறிவித்தல் எளிதன்றே.

## வேறு.

நித்திய வழிவா னங்க நிலைநின்ற புலவ ராய
சத்திய ஞான ராம கிருஷ்ணராற் சாற்றப் பெற்ற
முத்தியி னெறியைக் காட்டு மொழிபல சிலவா ராய்ந்து
பத்திய நெறியிற் சொற்றேன் பற்றுளார் பற்று மாறே.

வாழிதமிழ் ஊழியுற வாழியபெய்ங் நான்மறைகள்
வாழிமதம் பற்பலவும் வாழியவே — வாழியர்கோன்
தென்னாட்டிற் றோன்றிவளர் செந்தமிழின் சங்கமிசை
யெந்நாட்டு மும்பரவ வேய்ந்து

வாழியிந் நூல் வாழியமெய் வாழியநன் னூலவர்
வாழிகுரு பாத மலர்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலை...